රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils and Local Government
නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව.
சுதந்திர சதுக்கம், கொழும்பு 07, இலங்கை.
Independence Square, Colombo 07, Sri Lanka.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>My No | CS/SLAS/ANN.TRA/2022 | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No | | දිනය<br>திகதி<br>Date | 2022.06.15 |

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்
ஆணைக்குழுக்களின் செயலாளர்கள்
மாவட்ட செயலாளர்கள் /அரசாங்க அதிபர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**2022 வருடாந்த இடமாற்றக் கட்டளைகள் தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு மேன்முறையிடுகளைச் சமர்ப்பித்தல் - நாடளாவிய சேவைகளின் உத்தியோகத்தர்கள்**

இந்த அமைச்சின் கீழ் உள்ள நாடளாவிய சேவைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் 2022 வருடாந்த இடமாற்றத் தீர்மானங்கள் தொடர்பில் உரிய காலப் பகுதியில் அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து மேன்முறையிடுகள் தொடர்பிலும் அந்த ஆணைக்குழுவின் தீர்மானங்கள் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளதுடன் ,அதனடிப்படையில் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்றத் தீர்மானங்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

02. வருடாந்த இடமாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்பட்ட திகதியின் பின்னர் நாடளாவிய சேவைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்றத் தீர்மானங்கள் தொடர்பான மேன்முறையீடுகள் அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு அனுப்பப்படுவதுடன் அது தொடர்பில் கவனத்தில் எடுத்த அரசாங்க சேவை ஆணைக்குழு உரிய திகதிக்கு முன்னர் மேன்முறையீடுகளைச் சமர்ப்பிக்கத் தவறிய உத்தியோகத்தர்களின் மேன்முறையீடுகளைக் கவனத்தில் கொள்வதில்லை எனத் தீர்மானித்துள்ளதாக அதன் செயலாளரின் PSC/APL/4/10/2022ஆம் இலக்க மற்றும் 2022.03.31 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அறிவித்துள்ளார்.

03. அதற்கிணங்க எதிர்காலத்தில் 2022 வருடாந்த இடமாற்றங்கள் தொடர்பில் உத்தியோகத்தர்களால் சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகளைக் கவனத்தில் கொள்வதில்லை என்று அரசாங்க சேவை ஆணைக்குழு எடுத்துள்ள தீர்மானம் தொடர்பில் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் அறிவிக்குமாறு பணிவுடன் அறியத் தருகின்றேன்.

கே.டீ.என். ரஞ்சித் அசோக
மேலதிகச் செயலாளர் ( அரச நிர்வாகம்)

ஒப்பம்./ எம்.எம்.பி.கே.மாயாதுன்னே
செயலாளர்
பொதுநிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| දුරකතන<br>தொலைபேசி<br>Telephone | 011-2696211-13<br>011-2166000 | ෆැක්ස්<br>தொலைநகல்<br>Fax | 011-2695279 | ඊ-මේල්<br>மின்னஞ்சல்<br>E-mail | info@pubad.gov.lk | වෙබ් අඩවිය<br>வெப்தளம்<br>Website | www.pubad.gov.lk |